செ.வெ.எண்.127 நாள்.9.02.2011

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆணையின் பேரில் அமைக்கப்பட்ட "புதிரை வண்ணார் நலவாரியத்தின்'' இரண்டாவது கூட்டம் இன்று (09.02.2011) மாலை 4.00 மணியளவில் சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள கூட்டரங்கில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்வாரியத்தில் 12 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். இவ்வாரிய உறுப்பினர்களுக்கு பிற வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் வழங்கப்படும். புதிரை வண்ணார் இன மக்களுக்கு சலுகைகள் வழங்குவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 1 கோடி ஒதுக்கித் தந்துள்ளார்கள். புதிரை வண்ணார் இன மக்களின் முன்னேற்றத்திற்காக அரசு மூலம் வழங்கப்படும் அனைத்து நலத்திட்டங்களும் சிறப்பாக தங்கு தடையின்றி கிடைப்பதை இவ்வாரியம் கண்காணிக்கும் வகையில் செயல்படும். இவ்வாரியத்தின் மூலம் இச்சமுதாய மக்களின் கல்வி நிலை உயரவும் இவர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, தொகுப்பு வீடுகள் கிடைக்கவும், பொருளாதார முன்னேற்றம் அடையவும், சலவை தொழில் சார்ந்த கடைகள் நடத்தவும், சிறு கடன்கள் வழங்கவும், இலவச சலவை பெட்டிகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இச்சமுதாய மக்களுக்கு பல்வேறு பயிற்சி வகுப்புகள் தாட்கோ மூலம் நடத்தப்பட்டு அவர்கள் தனியாக தொழில் தொடங்க வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும்.

இன்று நடந்த கூட்டத்தில் வாரிய உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளை எடுத்துக் கூறினர். வாரிய உறுப்பினர்களின் கருத்துக்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டு, துறை உயரதிகாரிகளுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். இவ்வாரியத்தில் "புதிரை வண்ணார்'' இன மக்கள் அனைவரையும் பதிவு செய்து வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை அம்மக்களுக்கு பெற்று தர விரைவான நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென அனைத்து உறுப்பினர்களுக்கும் அமைச்சரவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் அரசு ஆதிதிராவிடர் நலத்துறை செயலர் திரு தங்க கலியபெருமாள், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு பொ.சிவசங்கரன், இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு உ.இரவீந்திரன், இ.வ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு ச.விஜயராஜ்குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயரதிகாரிகள் உடன் இருந்தனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9